2008 ஜனவரி 28]

விரிவுபடுத்துவதற்குரிய ஏற்பாடு செய்யப்படும். இந்த ஆண்டு முதற்கொண்டு அங்கு Nursing Course-க்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். எனவே, கூடுதலாக விரிவுபடுத்தப்படும். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

15—

கிளைச் சிறைச்சாலை

***33139—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி கிளைச் சிறைச்சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தரங்கம்பாடி கிளைச் சிறையினைச் செப்பனிட நடப்பு நிதியாண்டு கட்டடப் பராமரிப்பு நிதியிலிருந்து தரங்கம்பாடி கிளைச் சிறைக்கு பண்டக அறை மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவை கட்டுவதற்கு ரூ.4.75 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அங்குள்ள சமையலறை ரூபாய் ஒரு இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறைச்சாலை ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. அது மீண்டும் 1989-ல் திறக்கப்பட்டு 14 கைதிகள் மட்டுமே அடைப்பதற்கான வசதி இருக்கிறது. அன்று பொறையார் காவல் நிலைய கைதிகள் மட்டுமே அதில் அடைக்கப்பட்டார்கள். இப்போது செம்பனார்கோயில்,

பெரம்பூர் அதைப்போல, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு வழக்குகள். ஆக 50-லிருந்து 60 கைதிகள் அங்கே அடைக்கப்படுகிறார்கள். அதுவும் பழைய பழுதடைந்த ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஆகவே, அதைக் கான்கிரீட் கட்டடமாக மாற்றித்தர வேண்டும்.

முற்பகல் 10-00

அதைப்போல, அங்கே கழிப்பிட வசதி இல்லை. குடிநீர் வசதி செய்து கொடுப்பதாக, நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். அதற்கு நன்றி. அந்தக் கைதிகளைப் பார்ப்பதற்கு வருகின்ற அவர்களுடைய உறவினர்கள் தங்குவதற்கு அறை கிடையாது. மேலும், அங்கே 12 காவலர்கள் மட்டுமே உள்ளனர். இன்றைய சூழ்நிலையில் இந்தக் காவலர்கள் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டியிருக்கிறது. ஆகவே, புழல் சிறையை நவீன வசதிகளுடன் கட்டி கைதிகளைக் காத்துவரும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலான அரசு, இந்தக் கிளைச் சிறைச்சாலையையும் நவீன வசதிகளுடன் கட்டிக்கொடுக்க முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல தரங்கம்பாடி கிளைச் சிறையிலே 12 அடைப்புகள் இருக்கின்றன. குறிப்பாக, தற்காலிகமாக விசாரணைக் கைதிகள்தான் அங்கே சிறையிலே அடைக்கப்பட்டு வருகிறார்கள். அந்த விசாரணைக் கைதிகள் இருக்கும் காலம் ஒரு மாத காலத்திற்குமேல் ஆகின்றபோது, உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, அதிகமான எண்ணிக்கை வருகின்றபோது மத்திய சிறைக்கு மாற்றப்படுகின்றார்கள். அருகிலே இருக்கின்ற திருச்சி மத்திய சிறைக்கு மாற்றப்படலாம். எந்த மத்திய சிறை அருகிலே இருக்கின்றதோ அந்த மத்திய சிறைக்கு மாற்றப்படுவது வழக்கமாக இருந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக, கான்கிரீட் கட்டடமாக மாற்ற வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்திலே இருக்கின்ற 100 கிளைச் சிறைச்சாலைகளிலே, ஆண்கள் கிளைச் சிறைச்சாலைகளிலே, 30 கிளைச் சிறைச்சாலைகளை கான்கிரீட் கட்டடமாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

2008 ஜனவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைத் துறையிலே வேலை பார்க்கும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும், காவல் துறையிலே உள்ள இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும் சம்பளம் 500 ரூபாய் வரை வித்தியாசமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். சிறைத் துறைக் காவலர்களுக்கும், காவல் துறைத் காவலர்களுக்கும் இப்படி அடிப்படையிலே வித்தியாசம் இருக்கிறது. எனவே, இரண்டு துறைகளிலும் சமமாக ஊதியம் வழங்க நமது அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையிலேதான் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறைத் துறை நிர்வாகத்திற்கும், காவல் துறை நிர்வாகத்திற்கும் இருந்த சில வேறுபாடுகளை நீக்கினார்கள். 100 ரூபாயாக இருந்த அவர்களுக்கான படியை 150 ரூபாயாக உயர்த்தினார்கள். அதேபோல, இந்த இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும் சலவைப் படி 30 ரூபாயாக இருந்ததை 100 ரூபாயாக உயர்த்தித் தந்தார்கள். ஆக, சிறைக் காவலர்களுக்கும் காவல் துறைக் காவலர்களுக்கும் இருந்த அனைத்து வேறுபாடுகளையும் கடந்த நிதிநிலை அறிக்கையிலேயே தலைவர் கலைஞர் அவர்கள் களைந்தார்கள். அவர்களுக்கு இரவிலே கொடுக்கின்ற உணவுப் படியிலேயிருந்து, நகரத்திலே கொடுக்கின்ற உணவுப் படியிலேயிருந்து மாற்றம் செய்து அனைத்தும் உத்தரவிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு ஒரேயொரு குறை மட்டும் உள்ளது. அவர்களுடைய ஒரேயொரு கோரிக்கை மட்டும் நிலுவையிலே உள்ளது. அவர்கள், காவல் துறையின் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும், சிறைத் துறையின் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்திலே வேறுபாடு இருப்பதைக் களைய கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். வருகின்ற காலத்திலே மாண்புமிகு முதல்வரோடு கலந்து, அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.